# COMBINED TECHNICAL SERVICES EXAMINATION

# (DIPLOMA / ITI STANDARD)

# COMPUTER BASED TEST

# DATE OF EXAM :16.09.2025 FN

# PAPER – II

# AGRICULTURE

# (DIPLOMA STANDARD) (CODE: 431)

1. The porphyrin in the earthworm body protects the worm from the injurious effect of
மண்புழுவின் உடலில் உள்ள போர்பைரின் என்ற வேதிபொருள் மண்புழுவினை கீழ்கண்டவற்றுள் ஒன்றினிடமிருந்து காக்கிறது.

(A) Heat
வெப்பம்

(B) pH
அமில-காரதன்மை

(C) Salt concentration
உப்பின் அளவு

(D) Bright light
மிகுந்த வெளிச்சம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

2. ________ is the common green manure crop recommended for Paddy.
________ என்பது நெல்லுக்கேற்ற முக்கியமான பசுந்தாள் உர பயிர்.

(A) Sunhemp
சணப்பை

(B) Pillipesara
பனிப்பயறு

(C) Dhaincha
தக்கபூண்டு

(D) Mung
பச்சைபயிறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

3. Among the following which is not bulky organic manure?
கீழ்கண்டவற்றுள் பெரும அங்க உரம் அல்லாதது.

(A) Farm yard manure
தொழு உரம்

(B) Green manure
பசுந்தாள் உரம்

(C) Fish manure
மீன்கழிவு உரம்

(D) Green leaf manure
பசுந்தழை உரம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

4. Plants suitable for hanging baskets are ________ and ________.
தொங்கும் தொட்டிகளில் வளர்க்க ஏற்ற செடிகள் ________ மற்றும் ________.

(A) Philodendron and Hedera
பைலோடென்டிரான் மற்றும் ஹைடிரா

(B) Eranthemum and Acalypha
எராந்திமம் மற்றும் அக்காலிபா

(C) Thuja and Ixora
தூஜா மற்றும் இக்ஸோரா

(D) Hydrangea and Marigold
ஹைடிராஞ்சியா மற்றும் செண்டுமல்லி

(E) Answer not known
விடை தெரியவில்லை

5. Among the following growth hormone, which one is comes under cytokinin?
பின்வருவனவற்றில் எந்த வளர்ச்சி ஹார்மோன் சைட்டோகைனின் கீழ்வரும்

(A) NAA
நாப்தாலீன் அசிட்டிக் அமிலம்

(B) IBA
இண்டோல் பியூட்டிரிக் அமிலம்

(C) IAA
இண்டோல் அசிட்டிக் அமிலம்

(D) BAP
பென்சைல் அமினோ பியூரின்

(E) Answer not known
விடை தெரியவில்லை

6. This is the rootstock used for Sapota
இது சப்போட்டாவின் ஒட்டுக்குச்சி

(A) Sapota seedling
சப்போட்டா கன்றுகள்

(B) Wild Sapota
காட்டு சப்போட்டா

(C) Pala
பாலா

(D) None of the above
மேற்கூறிய ஏதுமில்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

7. <u>Metarhizium</u> <u>anisopliae</u> used to control which insect's larva in manure pits
மெட்டார்கிசியம் அனிசோபிலியே எந்தப் பூச்சியின் புழுவை எருக்குழியில் கட்டுப்படுத்தும்?

(A) Coccinellid beetle
பொறி வண்டுகள்

(B) Rhinoceros beetle
காண்டாமிருக வண்டு

(C) Stem weevil
தண்டுக் கூண் வண்டு

(D) Pseudo stem weevil
வாழைத்தண்டு கூண் வண்டு

(E) Answer not known
விடை தெரியவில்லை

8. The extension of validity period of certified seed shall be for a period of ________ months.
சான்றளிக்கப்பட்ட விதைகளின் செல்லுபடியாகும் காலத்தை நீட்டிக்கும் காலக்கெடு எவ்வளவு?

(A) 9 months
ஒன்பது மாதங்கள்

(B) 6 months
ஆறு மாதங்கள்

(C) 8 months
எட்டு மாதங்கள்

(D) 5 months
ஐந்து மாதங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

9. A reliable visual indicator of physiological maturity in bhendi seed pods during seed production is
வெண்டையில் விதை உற்பத்தி செய்யும்பொழுது காய்கள் வினையியல் முதிர்ச்சி அடைந்ததைக் காட்டும் வெளிபுற அடையாளங்கள்

(A) Pods are green and tender with shiny surface
காய்கள் பசுமையாக, மென்மையாக, மின்னும் மேற்பரப்புடன் காணப்படும்

(B) Pods are yellowish green and slightly swollen
காய்கள் மஞ்சள் கலந்த பச்சை நிறமாகவும், சிறிது வீங்கியதாகவும் காணப்படும்

(C) Pods are brown, dry and show hairline cracks along ridges
காய்களின் விளிம்புகளில் மயிரிழை அளவு பிளவு தோன்றுவதும், பழுப்பு நிறமாகவும், உலர்ந்ததாகவும் காணப்படும்

(D) Pods are blackened and brittle with seed shattering
காய்கள் கருப்பாகவும், முறிந்து போகும் தன்மையுடன் விதைகள் சிதறுவதும் காணப்படும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

10. Advantage of using gametocides in hybrid seed production
வீரிய ஒட்டு இரக விதை உற்பத்தியில் வேதியியல் கலப்பின முகவர்கள் பயன்படுத்தப்படுவதால் ஏற்படும் நன்மை எது?

(A) They permanently alter the plant's genetic structure
தாவரத்தின் மரபணு அமைப்பை நிரந்தரமாக மாற்றும்

(B) They eliminate the need for pollination
மகரந்த சேர்க்கையை (pollination) முழுமையாக நீக்கும்

(C) They reduce labour by avoiding manual emasculation
ஆட்கள் மூலம் மகரந்த பை நீக்கம் செய்தல் குறைக்கப்படும்

(D) They guarantee 100% male sterility in all environmental conditions
அனைத்து சூழ்நிலைகளிலும் 100% ஆண் மலட்டுதன்மையை உறுதி செய்யும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

11. What is the typical pH range for Jam preparation?
ஜாம் தயாரிப்பதற்கான வழக்கமான pH வரம்பு என்ன?

(A) 2.0 to 3.0
2.0 – 3.0

(B) 3.5 to 4.0
3.5 – 4.0

(C) 7 to 8
7 – 8

(D) None of the above
இதில் எதுவுமில்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

12. CFTRI is located in

CFTRI (சி எப் டி ஆர் ஐ) எங்கு அமைந்துள்ளது

(A) Banglore
பெங்களூர்

(B) Mysore
மைசூர்

(C) New Delhi
புதுடெல்லி

(D) Lucknow
லக்னோ

(E) Answer not known
விடை தெரியவில்லை

13. Sorting of products into different lots is called as

பொருட்களை வெவ்வேறு தொகுதிகளாக வரிசைப்படுத்துவது இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) Assembling
கூடியது

(B) Dispersion
சிதறல்

(C) Grading
தரப்படுத்துதல்

(D) None of the above
இதில் ஏதுவுமில்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

14. Bacillus Thuringiensis bacteria posses the insecticidal toxin called as

பாசில்லஸ் துரின்சியன்சிஸ் என்ற பாக்டீரியா தன்னகத்தே கொண்டுள்ள பூச்சிக்கொல்லி நஞ்சின் பெயர்

(A) Alpha endotoxin
ஆல்பா என்டோடாக்சின்

(B) Beta endotoxin
பீட்டா என்டோடாக்சின்

(C) Gamma endotoxin
காமா என்டோடாக்சின்

(D) Delta endotoxin
டெல்டா என்டோடாக்சின்

(E) Answer not known
விடை தெரியவில்லை

15. Trichogramma is an
டிரைக்கோகிரம்மா என்பது ஒரு

(A) Larrah parasitoid
புழு ஒட்டுண்ணி

(B) Pupal parasitoid
கூட்டுப்புழு ஒட்டுண்ணி

(C) Egg parasitoid
முட்டை ஒட்டுண்ணி

(D) Egg larval parasitoids
முட்டை புழு ஒட்டுண்ணி

(E) Answer not known
விடை தெரியவில்லை

16. Protein content in mushroom on dry weight basis is about
உலர் எடை அடிப்படையில் காளானில் உள்ள புரதம் உள்ளடக்கம் சுமார்

(A) 5 – 10%

(B) 10 – 20%

(C) 20 – 35%

(D) 35 – 50%

(E) Answer not known
விடை தெரியவில்லை

17. For button mushroom production the temperature requirement is
மொட்டு காளான் உற்பத்திக்கு தேவையான வெப்பநிலை

(A) 22 – 28° C for spawn run, 15 – 18°C for fruit body formation
22 – 28° C வித்து வளர்தல், 15 – 18°C மொட்டு வளர்தல்

(B) 15 – 18° C for spawn run, 22 – 28°C for fruit body formation
15 – 18° C வித்து வளர்தல், 22 – 28°C மொட்டு வளர்தல்

(C) 10 – 14° C for spawn run, 20 – 25°C for fruit body formation
10 – 14° C வித்து வளர்தல், 20 – 25°C மொட்டு வளர்தல்

(D) 20 – 25° C for spawn run, 10 – 14°C for fruit body formation
20 – 25° C வித்து வளர்தல், 10 – 14°C மொட்டு வளர்தல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

18. Mushrooms are good for patients of
காளான் ———————— நோயாளிக்கு ஏற்ற உணவு

(A) Hypertension
உயர் ரத்தம் அழுத்தம்

(B) Diabetes
நீரிழிவு நோய்

(C) Constipation
மலச்சிக்கல்

(D) All the above
மேலே உள்ள அனைத்தும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

19. The biofertilizer commonly used for nitrogen fixation in leguminous plants.
பயிறு வகைச் செடிகளில் நைட்ரஜன் நிலைப்படுத்த பொதுவாகப் பயன்படுத்தப்படும் நுண்ணுயிரி எது?

(A) Rhizobium
ரைசோபியம்

(B) Azotobacter
அசட்டோபக்டர்

(C) Pseudomonas fluorescens
சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ்

(D) Trichoderma viridae
ட்ரைக்கோ டெர்மா விரிடி

(E) Answer not known
விடை தெரியவில்லை

20. The purpose of freeze-drying in biofertilizer preservation
நுண்ணுயிர் உரங்களின் பாதுகாப்பிற்கு (freeze-drying) உறைவு-உலர்த்தல் செய்தல் நோக்கம் என்ன?

(A) To increase microbial activity
நுண்ணுயிர் எண்ணிக்கை பெருக்கம்

(B) To preserve microbes in a dormant state
நுண்ணுயிர்களின் தூக்க நிலையில் பாதுகாப்பு

(C) To enhance microbial growth
நுண்ணுயிர்களின் அளவு பெருக்கம்

(D) To reduce microbial diversity
பல்வேறுப்பட்ட நுண்ணுயிர்களின் அளவு குறைப்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

21. An example for apparel wool sheep breed is
ஆடை தயாரிக்க பயன்படும் கம்பளியை உற்பத்தி செய்யும் செம்மறி ஆட்டு இனத்திற்கு ———— ஒரு எடுத்துக்காட்டாகும்.

(A) Nellore
நெல்லூர்

(B) Nilgiri
நீல்கிரி

(C) Madras Red
சென்னை சிகப்பு

(D) Trichy Black
திருச்சி கருப்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

22. Infections coryza in chicken is caused by

கோழிகளைத் தாக்கும் இன்பெக்ஷன் கொரைசா (Infections coryza) எனும் மேல்மூச்சுக் குழாய் நோயினை உண்டாக்குவது ———— ஆகும்.

(A) Bacteria
பாக்டீரியா

(B) Virus
வைரஸ்

(C) Protozoa
புரோட்டோசோவா

(D) Fungi
பூஞ்சைகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

23. A modern commercial layer starts laying around ________ weeks of age.

நவீன வணிக ரீதியான முட்டை கோழிகளில் முட்டையிட தொடங்கும் வாரம் ———— ஆகும்.

(A) 20 weeks
20வது வாரம்

(B) 10 weeks
10வது வாரம்

(C) 25 weeks
25வது வாரம்

(D) 15 weeks
15வது வாரம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

24. In newborn calf the umbilical chord should be painted with antiseptic solution and ligated to prevent
புதிதாக பிறந்த கன்றுகுட்டியின் தொப்புள் கொடியினை வெட்டி சுத்தமான நூல் கொண்டு கமுடிச்சிட்டு கிருமி நாசினி மருந்து தடவுதல் கீழ்கண்ட நோயினை தவிர்க்கும்.

(A) Pneumonia
நிமோனியா

(B) Coccidiosis
இரத்தக் கழிச்சல்

(C) Enteritis
கழிச்சல்

(D) Joint ill
மூட்டு நோய்

(E) Answer not known
விடை தெரியவில்லை

25. Crude protein content of cattle feed should be ________%.
கறவை மாடுகளுக்கான அடர் தீவனத்தில் இருக்க வேண்டிய கச்சாப் புரதத்தின் (Crude protein) அளவு ________%.

(A) 12 – 14

(B) 14 – 16

(C) 16 – 18

(D) 20 – 22

(E) Answer not known
விடை தெரியவில்லை

26. ________ is the 'true stomach' of ruminants.
அசைப்போடும் விலங்குகளின் உண்மையான வயிறு என்று அழைக்கப்படுவது

(A) Rumen
ரூமன்

(B) Reticulam
ரெட்டிக்குலம்

(C) Omasum
ஓமேசம்

(D) Abomasum
அபமேசம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

27. A partial vacuum and normal atmospheric pressure are alternated in the teat cup of a modern milking machine by
நவீன பால் கறவை இயந்திரத்தில் பகுதி வெற்றிடம் மற்றும் வளிமண்டல அழுத்தத்தினை உண்டாக்கக்கூடிய பகுதி

(A) Rubber liner of teat up
டிட் கப் ரப்பர் லைனர்

(B) Pulsator
பல்சேட்டர்

(C) Vacuum pump
வெற்றிட பம்ப்

(D) Teat claws of teat cluster
டிட் கிளஸ்டரின் டிட் கிளா

(E) Answer not known
விடை தெரியவில்லை

28. What is the procedure for arresting the growth of horn buds in calf?
கன்றுக்குட்டியில் கொம்பு மொட்டுகளின் வளர்ச்சியை நிறுத்துவதற்கான நடைமுறை என்ன?

(A) Dehorning
கொம்பு நீக்குதல்

(B) Branding by hot iron rod
சூடான இரும்பு மூலம் சுடுதல்

(C) Disbudding
கொம்புமுனைவெட்டுதல்

(D) Filleting
நகம் வெட்டுதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

29. The female parent is called as
பெற்றோர்களில் பெண் இனம் ———————— என அழைக்கப்படுகிறது.

(A) Dam
டேம்

(B) Sire
சையர்

(C) Ram
ரேம்

(D) Buck
பக்

(E) Answer not known
விடை தெரியவில்லை

30. The zoological name of Exotic cattle is
அயல்நாட்டு பசுமாட்டினங்களின் விலங்கினப் பெயர் ________ ஆகும்.

(A) *Bos taurus*
*பாஸ் டாரஸ்*

(B) *Bos indicus*
*பாஸ் இண்டிகஸ்*

(C) *Capra hircus*
*கேப்ரா ஹிர்கஸ்*

(D) *Ovis aries*
*ஓவிஸ் ஏரிஸ்*

(E) Answer not known
விடை தெரியவில்லை

31. Striga is a
சுடுமல்லி (ஸ்ரைகா) என்பது ஒருவகை

(A) Semi root parasite
பகுதி நேர வேர் ஒட்டுண்ணி

(B) Semi stem parasite
பகுதி நேர தண்டு ஒட்டுண்ணி

(C) Total root parasite
முழு நேர வேர் ஒட்டுண்ணி

(D) Total stem parasite
முழுநேர தண்டு ஒட்டுண்ணி

(E) Answer not known
விடை தெரியவில்லை

32. Wart disease of potato in Darjeeling of India is
இந்தியாவின் டார்ஜிலிங் பகுதியில் உருளை கிழங்கு வார்ட்நோய் எந்த வகை பரவலை கொண்டது

(A) Pandemic
உலகம் பரவும் தொற்று

(B) Endemic
நிலைகொண்டதாக

(C) Epidemic
பெருவாரியாக பரவும் தொற்று

(D) Sporadic
விலக்கான முறையில் ஏற்படும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

33. The rice disease is associated with zinc deficiency.
சிங்க் குறையுடன் தொடர்புடைய நெல்பயிர் நோய்

(A) Blast disease
பிளாஸ்ட்/குலைநோய்

(B) Sheath rot disease
இலையுறை அழுகல் நோய்

(C) Sheath blight disease
இலை கருகல் நோய்

(D) Khaira disease
கைரா நோய்

(E) Answer not known
விடை தெரியவில்லை

34. Tomato spotted wilt disease is transmitted by
தக்காளி புள்ளி வாடல் நச்சுயிரி எந்த பூச்சியின் மூலம் பரவுகிறது.

(A) White fly
வெள்ளை ஈ

(B) Aphids
பச்சைப் பூச்சி/இலைசாறு குடிக்கும் பூச்சி

(C) Thrips
திரிப்ஸ் பூச்சி

(D) Mealy bugs
மாவுப் பூச்சி

(E) Answer not known
விடை தெரியவில்லை

35. The antibiotic is used for management of fungal diseases is
பூஞ்சாணா நோயை கட்டுப்படுத்தக்கூடிய உயிர் எதிர் கொல்லி

(A) Tetracycline
டெட்ராசைக்லின்

(B) Streptomycin
ஸ்டெப்ட்ரோமைசின்

(C) Penicillin
பெனிசிலின்

(D) Aureofungin
ஆரோபஞ்சின்

(E) Answer not known
விடை தெரியவில்லை

36. The Father of plant pathology is
பயிர் நோயியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

(A) Anton Debary
ஆன்டன் டிபேரி

(B) D. Innovasky
D. இனோவோஸ்கி

(C) M. Beijerinck
M. பெய்ஜெரிங்க்

(D) Garrett
கேரட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

37. Bed spawn otherwise called as
காளான் படுக்கை வித்து எவ்வாறு அழைக்கப்படுகிறது

(A) Mother spawn
தாய் வித்து

(B) Master spawn
முதன்மை வித்து

(C) Commercial spawn
வியாபார வித்து

(D) Grain spawn
தானிய வித்து

(E) Answer not known
விடை தெரியவில்லை

38. The primary goal of a roving survey in plant pathology
தாவர நோயியல் ஆய்வில் ரோவின் சர்வேயின் முதன்மை நோக்கம்

(A) Monitor a fixed plot overtime
ஒரு நிலையான புலத்தை கண்காணிக்க

(B) Collect random samples across regions
பகுதிகளுக்கு இடையில் சீரற்ற மாதிரிகளை சேகரிக்க

(C) Measure soil nutrient levels
மண்ணின் ஊட்டச்சத்து நிலைகளை அளக்க

(D) Apply fungicides uniformly
பூச்சிகொல்லிகளை ஒரே மாதிரியாக பயன்படுத்த

(E) Answer not known
விடை தெரியவில்லை

39. Monocycle diseases produces disease progress curve of
ஒற்றை சுழற்ச்சி நோய்கள் எந்த வகை வளைவை உருவாக்குகின்றன

(A) Saturation
நிறைவு வகை

(B) Straight line
நேர்கோடு

(C) Sigmoid type
சிக்மாய்டு

(D) Hyperbolic type
ஹைப்பர்பொலிக் வகை

(E) Answer not known
விடை தெரியவில்லை

40. The first person to observe nematode in association with plant disease was
தாவர நோயுடன் தொடர்புடைய நூற்புழுவை முதன்முதலில் கவனித்தவர்

(A) N.A. Cobb
என்.எ. காப்

(B) John Neetham
ஜான் நீதம்

(C) E.J. Butler
ஈ.ஜெ. பட்லர்

(D) Chitwood
சிட்வுட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

41. Sexual stage is also known as
பூசணத்தின் பாலியல் நிலையின் மறுபெயர்

(A) Teleomorph
டெலோமார்ஃப்

(B) Anamorph
அனமார்ஃப்

(C) Sexomorph
செக்சோமார்ஃப்

(D) Benamorph
பெனோமார்ஃப்

(E) Answer not known
விடை தெரியவில்லை

42. Bacteria reproduce primarily by
பாக்டீரியா எந்த முதன்மையான முறையில் இனப்பெருக்கம் செய்கிறது.

(A) Binary fission
பைனரி பிஷன்

(B) Budding
முளை விடுதல்

(C) Mitosis
மைட்டாசிஸ்

(D) Fragmentation
துண்டாக்குதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

43. Lichens are a symbiotic association between
லிச்சன்ஸ் என்பது பின்வரும் உயிரினங்களின் எந்த வகை கூட்டிணைவு

(A) Fungi and protozoa
பூஞ்சைகள் மற்றும் புரட்டோசோவா

(B) Algae and fungi
பாசிகள் மற்றும் பூஞ்சைகள்

(C) Algae and bacteria
பாசிகள் மற்றும் பாக்டீரியா

(D) Fungi and viruses
பூஞ்சைகள் மற்றும் நச்சுயிரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

44. Which is the pest causing die back symptom in tea?
தேயிலை பயிரில் குருத்து பின்னோக்கி சாகுதல் அறிகுறியை உண்டாக்கும் பூச்சி எது ?

(A) Tea mosquito bug
தேயிலை கொசு நாவாய் பூச்சி

(B) Termite
கரையான்

(C) Leaf hopper
இலைத்தத்துப் பூச்சி

(D) Hairy caterpillar
கம்பளிப் புழு

(E) Answer not known
விடை தெரியவில்லை

45. Incorporation of <u>metarhizium</u> <u>anisopliae</u> in manure pits help to minimize the damage by ____________ in coconut.
தென்னை தோட்டத்திலுள்ள எருக்குழியில் "மெட்டாரைசியம் அனிசோபிலே" பூஞ்சாணத்தை கலப்பதன் மூலம் எந்த பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

(A) Rhinoceros beetle
காண்டா மிருக வண்டு

(B) Red palm weevil
சிவப்பு கூண்வண்டு

(C) Black headed caterpillar
கருப்பு தலை புழு

(D) Scale insects
செதில் பூச்சி

(E) Answer not known
விடை தெரியவில்லை

46. Diamond back math is a major pest of
வைர முதுகு அந்து பூச்சி எந்த பயிரில் அதிக அளவு சேதம் விளைவிக்கும்.

(A) Pepper
மிளகு

(B) Cashew
முந்திரி

(C) Cauliflower
காலிபிளவர்

(D) Brinjal
கத்தரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

47. Which of the following is a major pest on groundnut?
கீழ்காணும் பூச்சிகளில் வேர்கடலை பயிரை தாக்கும் முக்கியமான பூச்சி எது?

(A) Red hairy caterpillars
சிவப்பு கம்பளிப் புழு

(B) Stem borers
தண்டு துளைப்பான்

(C) Shoot bug
குருத்து நாவாய் பூச்சி

(D) Brown plant hopper
புகையான்

(E) Answer not known
விடை தெரியவில்லை

48. Earthing up is done in sugarcane to reduce the incidence of
கரும்பில் மண் அணைப்பதனால் எந்த பூச்சியின் தாக்குதல் குறைக்கப்படுகிறது.

(A) Early shoot borer
இளங் குருத்து புழு

(B) Internode borer
இடைக்கணுப் புழு

(C) Top borer
நுனிக் குருத்து புழு

(D) Termites
கரையான்

(E) Answer not known
விடை தெரியவில்லை

49. Presence of large number of ants at the base of the finger millet plant
கேழ்வரகு செடியின் அடிப்பகுதியில் அதிக எண்ணிகையிலான எறும்புகள் இருப்பதன் அறிகுறி

(A) Ragi root aphid
கேழ்வரகு வேர் அசுவினி

(B) Stem borer
தண்டு துளைப்பான்

(C) Termite
கரையான்கள்

(D) Shoot bag
குருத்து நாவாய் பூச்சி

(E) Answer not known
விடை தெரியவில்லை

50. What is the role of protective equipment when handling pesticides?
பூச்சிக்கொல்லிகளை கையாளும்போது பாதுகாப்பு உபகரணங்களின் பங்கு என்ன?

(A) To increase pesticide effectiveness
பூச்சிக்கொல்லி செயல்திறனை அதிகரிக்கிறது

(B) To reduce exposure to harmful chemicals
ஆபத்தான ரசாயனங்களை உடலுக்கு நேரடி தாக்கம் ஏற்படாமல் தடுக்கும்

(C) To improve application speed
பயன்பாட்டு வேகத்தை மேம்படுத்துகிறது

(D) To enhance crop yield
பயிர்களின் விளைச்சலை அதிகரிக்கிறது

(E) Answer not known
விடை தெரியவில்லை

51. Which of the following pesticide formulation is not sprayable?
கீழ்வரும் பூச்சிகொல்லி தன்மையை தெளிப்பான்களில் தெளிக்க முடியாது?

(A) Wettable powder
வெட்டப்புள் பவுடர்

(B) Emulsifiable concentrate
எமெல்சிபயர் கான்சென்ரேசன்

(C) Granule
கிரனுல்

(D) Soluble powder
சாலிபுல் பவுடர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

52. The fumigant used in rat borrows is
வயல்வெளிகளில் வாழும் எலிகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் வாயுநிலை வேதிபொருளின் பெயர் என்ன?

(A) Profenophos
பிரோபோனோபாஸ்

(B) Phorate
போரேட்

(C) Chloropyriphos
குளோரோபைரிபாஸ்

(D) Aluminium phosphide
அலுமினியம் பாஸ்பேட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

53. Examples of newer insecticide
கீழ்காணும் பூச்சிகொல்லி வகைகளில் புதுவகையான பூச்சிகொல்லி எடுத்துக்காட்டு

(A) Spinosad
ஸ்பினோசேட்

(B) Acetamiprid
அசிட்டோபிரிட்

(C) Thiomethaxam
தையோமிதஸ்காம்

(D) Cypermethrin
சைபர்மெத்ரின்

(E) Answer not known
விடை தெரியவில்லை

54. Father of host plant resistance is
ஓம்பு தாவர எதிர்ப்பு (HPR) தந்தை யார்?

(A) Knippling
நிப்பிலிங்

(B) Snodgrass
ஸ்நட்கிரஸ்

(C) Hastrum
ஹான்ஸ்ரோம்

(D) R.H. Painter
ஆர்.எச். பெயின்டர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

55. <u>Platygastes</u> <u>oryzae</u> is the bio-control agent of
<u>பிலாட்டிகேஸ்ட்</u> <u>ஒரேசே</u> என்னும் உயிரியல் காலணி கீழ்காணும் பூச்சியை கட்டுப்படுத்தும்

(A) Rice stem borer
நெல் தண்டு துளைப்பான்

(B) Cotton bollworm
பருத்தி காய் துளைப்பான்

(C) Fruit borer
பழத் துளைப்பான்

(D) Rice gall-midge
நெல் ஆனைகொம்பன் ஈ

(E) Answer not known
விடை தெரியவில்லை

56. Which of the following are helpful in integrated pest management as naturals enemies?
ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையில் பயன்படுத்தப்படும் இயற்கை எதிரிகள் எவை?

(A) Lady bird beetles, chrysopa, thrips
பொறிவண்டுகள், கிரைசோபா, இலைப்பேன்

(B) Aphids, mealy bugs, leafhoppers
அசுவிணி, மாவுப்பூச்சி, தத்துப்பூச்சி

(C) Lady bird beetles, chrysopa, spiders
பொறிவண்டுகள், கிரைசோபா, சிலந்திகள்

(D) Leaf hoppers, spiders, dragon flies
தத்துப்பூச்சி, சிலந்திகள், தட்டான்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

57. Insects are classified based on
பூச்சிகளை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன

(A) Antermae
நுகர் கொம்புகள்

(B) Wings
இறகுகள்

(C) Legs
கால்கள்

(D) Mouth parts
வாய்பகுதிகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

58. Royal jelly secretion of
ராயல் ஜெல்லி சுரக்கும் சுரப்பி நாளம் எது?

(A) Labial glands
லேபியல் சுரப்பி

(B) Neurosecretary cells
நியுரோ செக்கிரேட்டரி சுரப்பி

(C) Hypopharyngeal glands
ஹைப்போ பேரன்சியல் சுரப்பி

(D) Mandibular glands
மேண்டி புலார் சுரப்பி

(E) Answer not known
விடை தெரியவில்லை

59. The Indian Lac research institute is situated at
இந்தியாவில் அரக்கு (Lac) ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள இடம்

(A) Mysore
மைசூர்

(B) Ranchi
ராஞ்சி

(C) Pune
பூனே

(D) Delhi
டெல்லி

(E) Answer not known
விடை தெரியவில்லை

60. The mixture of wax and earth or resin found in the nest of stingless bees is known as
கொசுத் தேனீக் கூட்டில் காணப்படும் மெழுகு மற்றும் மண் அல்லது பிசின் கலந்த கலவைக்குப் பெயர் என்ன?

(A) Nectar
மதுரம்

(B) Bee bread
தேனீ ரொட்டி

(C) Cerumen
செருமென்

(D) Propolis
புரோபோலிஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

61. The most widely used seed health test for all kinds of seed is
அனைத்து வகை விதைகளுக்கும் பரவலாக விதை நலம் பற்றி அறிய பயன்படும் பரிசோதனை யாது?

(A) Blotter test
உறிஞ்சும் தாள் பயன்படுத்துவது

(B) Agar plate test
அகார் தட்டு பரிசோதனை

(C) NaOH seed soak test
சோடியம் ஹைட்ராக்சைடில் ஊறவைப்பது

(D) Washing test
கழுவுதல் பரிசோதனை

(E) Answer not known
விடை தெரியவில்லை

62. ____________ is used for dessication of seed.
__________ விதையிலுள்ள ஈரப்பதம் குறைக்க பயன்படுகிறது.

(A) Potassium
பொட்டாசியம்

(B) Silica gel
சிலிக்கா ஜெல்

(C) Sulphur
கந்தகம்

(D) Gypsum
ஜிப்சம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

63. The term dunken layer related to __________ crop.
டங்கன் கோடு என்பது இந்த பயிருடன் தொடர்புடையது

(A) Sorghum
சோளம்

(B) Cumbu
கம்பு

(C) Maize
மக்காச்சோளம்

(D) Cotton
பருத்தி

(E) Answer not known
விடை தெரியவில்லை

64. Removal of few plants of ADT 50 rice variety in CR 1009 seed production paddy field is called as
சி.ஆர். 1009 இரக நெல் விதை உற்பத்தி வயலில் சில ஏடீடி 50 நெல் இரக செடிகளை நீக்குவதை இவ்வாறு அழைக்கிறோம்?

(A) Roguing
கலவன் அகற்றுதல்

(B) Pinching
நுனி கிள்ளுதல்

(C) Clipping
நுனி அகற்றுதல்

(D) Grading
சுத்திகரித்தல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

65. Choose correct sequence of seed certification process
விதை சான்றளிப்பு முறையில் சரியான வழிமுறையை தேர்வு செய்க.

1. Source seed – field inspection – processing – tagging
மூலவிதை – வயல் ஆய்வு – விதை சுத்திகரிப்பு – அட்டை பொருத்துதல்

2. Field inspection – source seed – tagging – processing
வயல் ஆய்வு – மூல விதை – அட்டை பொருத்துதல் – விதை சுத்திகரிப்பு

3. Processing – source seed – tagging – field inspection
விதை சுத்திகரிப்பு – மூல விதை – அட்டை பொருத்துதல் – வயல் ஆய்வு

4. Tagging – processing – source seed – field inspection
அட்டை பொருத்துதல் – விதை சுத்திகரிப்பு – மூல விதை – வயல் ஆய்வு

(A) 1 alone correct
1 மட்டும் சரி

(B) 2 alone correct
2 மட்டும் சரி

(C) 3 alone correct
3 மட்டும் சரி

(D) 3 and 4 alone correct
3 மற்றும் 4 மட்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

66. High moisture seeds are dried at
அதிகமான ஈரப்பதம் உடைய விதைகளை எந்த வெப்பநிலையில் உலர்த்த வேண்டும்

(A) Low temperature
குறைந்த வெப்பநிலையில்

(B) High temperature
அதிகமான வெப்பநிலையில்

(C) Very low temperature
மிகவும் குறைந்த வெப்பநிலையில்

(D) Very high temperature
மிகவும் அதிகமான வெப்பநிலையில்

(E) Answer not known
விடை தெரியவில்லை

67. The colour of seed certification tag attached with foundation seed is
ஆதார விதை சான்று அட்டை எந்த நிறத்தில் இருக்கும்

(A) White colour
வெள்ளை நிறம்

(B) Blue colour
நீலம் நிறம்

(C) Golden yellow colour
மஞ்சள் நிறம்

(D) Opal green colour
பச்சை நிறம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

68. In which type of crops is mutation breeding usually practiced as a standard method of plant improvement?
எந்த விதமான பயிர் வகைகளில் சடுதிமாற்ற இனப்பெருக்க முறை, பயிர் மேம்பாட்டிற்கான நிலையான முறையாக பின்பற்றப்படுகிறது?

(A) Sexually propagated crops
விதை வழிப் பெருக்கம் செய்யும் பயிர்கள்

(B) Vegetatively propagated crops
விதையில்லாப் பெருக்கம் செய்யும் பயிர்கள்

(C) Cereal crops
தானிய வகைப் பயிர்கள்

(D) Pulse crops
பயறு வகைப் பயிர்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

69. Identify the crop using genetic male sterility to make hybrids
எந்த பயிரில் ஹைப்ரிட் விதைகளை உருவாக்க மரபியல் ஆண் நிழல் (Genetic male sterility – GMS) பயன்படுத்தப்படுகிறது.

(A) Rice
அரிசி

(B) Pigeonpea
துவரை

(C) Wheat
கோதுமை

(D) Barley
பார்லி

(E) Answer not known
விடை தெரியவில்லை

70. Among the following crops, is best suited for synthetic variety development
கீழே குறிப்பிட்டுள்ள பயிர்களில் எது செயற்கை வகை (synthetic variety) உருவாக்கத்திற்கு மிகவும் பொருத்தமானது ?

(A) Cotton
பருத்தி

(B) Redgram
துவரம் பருப்பு

(C) Rice
அரிசி

(D) Maize
மக்காச்சோளம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

71. Which of the following is not a procedure under plant hybridization?
பயிர் களப்பின உற்பத்தியில் கடைபிடிக்கப்படாத செயல்முறை

(A) Evaluation of parents
பெற்றோரை மதிப்பீடு செய்தல்

(B) Emasculation
ஆண்மை நீக்கம்

(C) Pollination
மகரந்த சேர்க்கை

(D) Purification
தூய்மைப்படுத்துதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

72. The method most suitable for improving self pollinated crops
சுய-மலர்ச்சிப் பயிர்களை மேம்படுத்த மிகவும் பொருத்தமான இனப்பெருக்க முறை எது?

(A) Pedigree breeding
வம்சாவளி முறை (Pedigree breeding)

(B) Mass selection
மாஸ் தேர்வு (Mass selection)

(C) Clonal selection
கிளோனல் தேர்வு (Clonal selection)

(D) Cross pollination
குறுக்கு மலர்ச்சி (Cross pollination)

(E) Answer not known
விடை தெரியவில்லை

73. The main purpose of developing inbred lines in plant breeding is
தாவர இனவிருத்தியியல் இனப்பெருக்கத்தில் இன்பிரெட் வரிசைகளை உருவாக்குவதின் முக்கிய நோக்கம் என்ன?

(A) To increase heterozygosity
மரபியல் பல்துறை அதிகரிக்க

(B) To produce genetically uniform lines for hybrid production
இணைச்செய்யப்பட்ட விதை உற்பத்திக்காக மரபணு ஒரே மாதிரியான வரிசைகளை உருவாக்க

(C) To improve seed dormancy
விதை உறுக்கத்தைக் கூட்ட

(D) To promote cross pollination
குறுக்கு மகரந்த சேர்க்கையை அதிகரிக்க

(E) Answer not known
விடை தெரியவில்லை

74. The following line is not required in two line breeding system?
கீழே குறிப்பிடப்பட்டவையில் எது இரு வரிசை முறையில் தேவையில்லை?

(A) EGMS line
சூழலியல் உணர்திறன் கொண்ட ஆண் நிழல் வரிசை

(B) Restorer line
வாழ்த்தும் வரிசை

(C) Hybrid seed
வீரிய ஒட்டு விதைகள்

(D) Maintainer line
பராமரிப்பு வரிசை

(E) Answer not known
விடை தெரியவில்லை

75. What is the flower opening time in rice?
நெல்லில் பூ பூக்கும் நேரம் எது?

(A) 6.00 a.m to 8 a.m
காலை 6 – 8 மணி

(B) 4.00 a.m to 6 a.m
காலை 4 – 6 மணி

(C) 9.00 a.m to 11. a.m
காலை 9 – 11 மணி

(D) 8 a.m to 9.00 a.m
காலை 8 – 9 மணி

(E) Answer not known
விடை தெரியவில்லை

76. Choose the correct mechanisms which promotes self-pollination
கீழ்கண்டவற்றில் தன்மகரந்த சேர்க்கையை சரியாக ஊக்குவிக்கும் தன்மை எது?

(A) Dichogamy
டைகோகேமி (இருகாலப் பக்குவம்)

(B) Protogyny
புரோட்டோகைனி ஆண்முன் முதிர்வு

(C) Cleistogamy
கிளிஸ்டோகேமி மலராத தன் மகரந்த சேர்க்கை

(D) Male sterility
ஆண் மலட்டுத்தன்மை

(E) Answer not known
விடை தெரியவில்லை

77. Development of varieties over centuries without artificial selection are plant breeding efforts
பின்வருவனவற்றில் எது விவசாயிகள் தலைமுறைகள் கடந்தும் வளர்த்த பாரம்பரிய பயிர் வகைகளை குறிக்கும் சொல்?

(A) Hybrids
ஹைபிரிட்கள்

(B) Land races
நாட்டு வகைகள்

(C) Mutants
சடுதி மாற்றிகள்

(D) Transgenic
மாற்றியமைக்கப்பட்ட உயிரிகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

78. Among the following protein is incorrectly paired
கீழ்கண்டவற்றுள் எந்த புரதம் தவறாக பொருத்தப்பட்டுள்ளது?

(A) Wheat – Glutenin
கோதுமை – குளுட்டினின்

(B) Barely – Hordein
பார்லி – ஹார்டின்

(C) Maize – Zein
மக்காசோளம் – ஜீய்ன்

(D) Paddy – Phaseolin
நெல் – ஃபெஸ்சியோலின்

(E) Answer not known
விடை தெரியவில்லை

79. Chief source of light energy for photosynthesis in plants is
பயிர்களின் ஒளிச்சேர்க்கைக்கான முக்கிய ஒளி ஆற்றலின் ஆதாரம்

(A) Moon
நிலா

(B) Sun
சூரியன்

(C) Star
நட்சத்திரம்

(D) Artificial light
செயற்கை ஒளி

(E) Answer not known
விடை தெரியவில்லை

80. In which part of the plant all does photosynthesis primarily occur?
ஒளிச்சேர்க்கை (photosynthesis) தாவர சூழ்நிலையின் எந்த பகுதியில் முதன்மையாக நடைபெறுகிறது?

(A) Mitochondria
மைட்டோகாண்ட்ரியா

(B) Nucleus
அணுவகம்

(C) Chloroplast
பச்சையம் (குளோரோபிளாஸ்ட்)

(D) Ribosome
ரைபோசோம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

81. Uzhavan app launched in the year
உழவன் செயலி தொடங்கப்பட்ட ஆண்டு

(A) 2017
(B) 2018
(C) 2019
(D) 2016
(E) Answer not known
விடை தெரியவில்லை

82. PMFME Scheme was launched in
PMFME திட்டம் எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது?

(A) June 29, 2021
ஜூன் 29, 2021
(B) June 29, 2022
ஜூன் 29, 2022
(C) June 29, 2020
ஜூன் 29, 2020
(D) June 29, 2019
ஜூன் 29, 2019
(E) Answer not known
விடை தெரியவில்லை

83. The science and application of scientific as well as socio-economic knowledge and legal rules for production is called as
அறிவியல் மற்றும் சமூக – பொருளாதார அறிவு மற்றும் உற்பத்திக்கான சட்ட விதிகளின் அறிவியல் மற்றும் பயன்பாடு என்ன என்று அழைக்கப்படுகிறது.

(A) Food processing
உணவு பதப்படுத்துதல்
(B) Food manufacturing
உணவு உற்பத்தி
(C) Food Science
உணவு அறிவியல்
(D) Food Technology
உணவு தொழில்நுட்பம்
(E) Answer not known
விடை தெரியவில்லை

84. An approach followed by private corporate companies involved in direct selling or agro processing is called as
நேரடி விற்பனை அல்லது வேளாண் பதப்படுத்தலில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவன நிறுவனங்கள் பின்பற்றும் அணுகுமுறை எவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) Training approach
பயிற்சி அணுகுமுறை

(B) Cost sharing approach
செலவுப் பகிர்வு அணுகுமுறை

(C) Contract farming approach
ஒப்பந்த விவசாய அணுகுமுறை

(D) Project approach
திட்ட அணுகுமுறை

(E) Answer not known
விடை தெரியவில்லை

85. Name the category of people eligible to establish an agri clinic and agri business centre under the AC and ABC scheme.
AC மற்றும் ABC திட்டத்தின் கீழ் வேளாண் மருந்தகம் மற்றும் வேளாண் வணிக மையத்தை நிறுவ தகுதியுள்ள நபர்களை குறிப்பிடவும்.

(A) Any farmer
எந்தவொரு விவசாயியும்

(B) Only government officials
அரசு அதிகாரிகள் மட்டும்

(C) Agriculture graduates
வேளாண் பட்டதாரிகள்

(D) Bank manager
வங்கி மேலாளர்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

86. Why do farmers sometimes hesitate to seek new information?
விவசாயிகள் சில நேரங்களில் புதிய தகவல்களைத் தேட தயங்குவது ஏன்?

(A) Easy adoption
எளிதான தத்தெடுப்பு

(B) Free access
இலவச அணுகல்

(C) Fear of change
மாற்றத்திற்கான பயம்

(D) Social pressure
சமூக அழுத்தம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

87. SWOT stands for
SWOT என்றால் என்ன?

(A) Strength, Weakness, Opportunity, Technology
பலம், பலவீனம், வாய்ப்பு, தொழில்நுட்பம்

(B) Strength, Weakness, Opportunity, Threat
பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல்

(C) Strength, Wealth, Opportunity, Threat
பலம், செல்வம், வாய்ப்பு, அச்சுறுத்தல்

(D) Strength, Weakness, Opportunity, Transfer
பலம், பலவீனம், வாய்ப்பு, பரிமாற்றம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

88. The motivation theory that focuses on satisfying basic needs before moving to higher needs is :
உயர்ந்த தேவைகளுக்குச் செய்வதற்கு முன் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தும் உந்துதல் கோட்பாடு

(A) Maslow's Hierarchy of needs
மாஸ்லோவின் தேவைகளின் படிநிலை

(B) Herzberg's Two-factor theory
ஹெர்ஸ்பெர்க்கின் இரு காரணி கோட்பாடு

(C) Expectancy theory of needs
எதிர்பார்ப்பு கோட்பாடு தேவைகள்

(D) Equity theory
சமத்துவக் கோட்பாடு

(E) Answer not known
விடை தெரியவில்லை

89. The individual mentally examines the possibility of application of the innovation under own condition is called as
ஒரு நபர் தனது சொந்த சூழ்நிலையில் புதுமையைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை மனரீதியாக ஆராய்வது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) Need
தேவை

(B) Deliberation
ஆலோசித்தல்

(C) Trial
சோதனை

(D) Evaluation
மதிப்பீடு

(E) Answer not known
விடை தெரியவில்லை

90. The society has brought in far - reaching changes in social relationships is called as
சமூகம், சமூக உறவுகளில் மிகுந்த மாற்றங்களை கொண்டு வந்த நிலை எவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) Social evolution
சமூக வளர்ச்சி

(B) Social reform
சமூக சீர்திருத்தம்

(C) Social change
சமூக மாற்றம்

(D) Social development
சமூக மேம்பாடு

(E) Answer not known
விடை தெரியவில்லை

91. The degree to which an innovation is perceived as better than the idea it supersedes.
ஒரு புதுமை எந்த அளவிற்கு அது முறியடிக்கும் கருத்தை விட சிறந்தது என்று கருதப்படுகிறது.

(A) Relative advantage
ஒப்பீட்டு தன்மை

(B) Complexity
சிக்கலான தன்மை

(C) Observability
கவனிக்கத்தக்க தன்மை

(D) Trial ability
சோதனைக்குரிய தன்மை

(E) Answer not known
விடை தெரியவில்லை

92. A systematic display of models, specimens, charts, photographs, pictures, posters, information etc. in a sequence around a theme to create awareness and interest in the community.
சமூகத்தில் விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் ஏற்படுத்துவதற்காக வரிசையாக, மாதிரிகள், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், படங்கள், சுவரொட்டிகள், தகவல்கள் போன்றவற்றை முறையாகக் காட்சிப்படுத்துதல்

(A) Exhibition
கண்காட்சி

(B) Campaign
பிரச்சாரம்

(C) Farmer's day
உழவர் தினம்

(D) Study Tour
கல்வி சுற்றுலா

(E) Answer not known
விடை தெரியவில்லை

93. It is the decision to make full use of an innovation as the best course of action available.
புதுமையான யோசனை அல்லது கண்டுபிடிப்பை, கிடைப்பிலுள்ள சிறந்த தீர்வாகக் கருதி, அதனை முழுமையாகப் பயன்படுத்த தீர்மானிக்கும் செயல்முறை

(A) Innovation
புதுமை

(B) Diffusion
பரவல்

(C) Adoption
தத்தெடுப்பு

(D) Innovation decision process
புதுமை முடிவு செயல்முறை

(E) Answer not known
விடை தெரியவில்லை

94. Which among the following is an objective of result demonstration
பின்வருவனவற்றில் எது முடிவுசார் செய்முறை விளக்கத்தின் நோக்கமாகும்

(A) To teach, skills and stimulate people to action
தொழில்நுட்ப திறன்களை வளர்த்து மக்களை செயல்பட தூண்டுதல்

(B) To improve upon the result by doing a job in a better way
ஒரு வேலையை சிறந்த முறையில் செய்வதன் மூலம் முடிவை மேம்படுத்த

(C) To appear personally before a large audience
அதிக பார்வையாளர்கள் முன் தனிப்பட்ட முறையில் தோன்றுவது

(D) To show the advantages and applicability of a newly recommended practice in farmers own situation
விவசாயிகளின் சொந்த சூழ்நிலையில் புதிதாக பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையின் நன்மைகள் மற்றும் பொருந்தக்கூடிய தன்மையைக் காட்ட

(E) Answer not known
விடை தெரியவில்லை

95. S-M-C-R model of communication was proposed by
S-M-C-R தொடர்பு மாதிரியை முன்மொழிந்தவர்

(A) Leagans
லீகன்ஸ்

(B) Schramm
ஸ்க்ராம்

(C) Rogers and Shoemaker
ரோஜர்ஸ் மற்றும் ஷுமேக்கர்

(D) Berlo
பெர்லோ

(E) Answer not known
விடை தெரியவில்லை

96. What was one is the main function assigned to the NSC among the options below?
கீழே உள்ள விருப்பங்களில் என்.எஸ்.சிக்கு ஒதுக்கப்பட்ட முக்கிய செயல்பாடு எது என்று குறிப்பிடுக.

(A) To organise the crop improvement at state level
மாநில அளவில் பயிர் மேம்பாட்டை ஏற்பாடு செய்தல்

(B) To announce the MSP
எம்எஸ்பியை அறிவிக்க

(C) To enter into contracts for the distribution and selling of seeds
விதைகளை விநியோகிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் ஒப்பந்தங்களை மேற்கொள்வது

(D) To produce breeder seed
இனப்பெருக்கம் செய்யும் விதைகளை உற்பத்தி செய்ய

(E) Answer not known
விடை தெரியவில்லை

97. The minimum support prices are announced for different agricultural crops by the GoI on the recommendations ———— of which commission listed below.
கீழே பட்டியலிடப்பட்டுள்ள எந்த ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் பல்வேறு வேளாண் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைகள் இந்திய அரசால் அறிவிக்கப்படுகிறது.

(A) Commission for MSP [CMSP]
குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான கமிஷன்

(B) Commission to Costs
செலவுகளுக்கான கமிஷன்

(C) Commission on Agricultural Prices
வேளாண் விலைகள் குறித்த கமிஷன்

(D) Commission for Agricultural Costs and Prices (CACP)
வேளாண் செலவு மற்றும் விலைகள் குறித்த ஆணையம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

98. When was the royal commission on agriculture passed?
விவசாயத்திற்கான அரசு ஆணையம் எப்போது நிறைவேற்றப்பட்டது?

(A) 1925
(B) 1928
(C) 1929
(D) 1930
(E) Answer not known
விடை தெரியவில்லை

99. In which year was the Food Corporation of India (FCI) was established?

இந்திய உணவுக் கழகம் (FCI) எந்த ஆண்டில் நிறுவப்பட்டது.

(A) 1961

(B) 1957

(C) 1955

(D) 1965

(E) Answer not known
விடை தெரியவில்லை

100. ———— is a pan India electronic trading portal which networks the existing APMC mandis to create a Unified national market for agricultural commodities.

வேளாண் பொருட்களுக்கான ஒருங்கிணைந்த தேசிய சந்தையை உருவாக்க தற்போதுள்ள ஏ.பி.எம்.சி மண்டிகளை இணைக்கும் ஒரு பான்–இந்தியா மின்னணு வர்த்தக இணையதளம்.

(A) Agricultural Market (e-TAM)
வேளாண் சந்தை ஈ (டிஏஎம்)

(B) e-PAN
ஈ (பிஏஎன்)

(C) National Agricultural Market (e-NAM)
தேசிய வேளாண் சந்தை – ஈ-நாம்

(D) e-AMN
ஈ–ஏஎம்என்

(E) Answer not known
விடை தெரியவில்லை

101. A market in which buyers and sellers are spread at the national level is called as
வாங்குபவர்களும், விற்பனையாளர்களும் தேசிய அளவில் பரவியிருக்கும் ஒரு சந்தை எவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) World market
உலகச் சந்தை

